## 2. உதவியை மறக்காத நண்பர்கள்

அழகான ஒரு வேப்ப மரம்.
அதன் கீழ் ஒரு சின்ன வாய்க்கால் ஓடியது.
மரத்தில் ஒரு மணிப்புறா கூடு கட்டி வாழ்ந்தது.
அது முட்டைகள் இட்டது.
அதில் இருந்து குஞ்சுப் புறாக்கள் பிறந்தன.
ஒரு நாள் மணிப்புறா குஞ்சுகளுக்கு இரை தேடிச் சென்றது.
அப்போது ஒரு பையன் புறாக்குஞ்சுகளைத் தூக்கிச் செல்ல வந்தான்.
அப்போது அதைப் பார்த்த ஒரு பெரிய கட்டெறும்பு அவன் காலைக் கடித்தது.
அவன் கத்திக் கொண்டே கீழே விழுந்து ஓடி விட்டான்.
இதைப் பார்த்த அம்மா புறா மிகவும் நன்றி சொன்னது.
ஒரு நாள் இந்த எறும்பு தவறிப் போய் வாய்க்கால் தண்ணீரில் விழுந்தது.
அதைப் பார்த்த புறாக் குஞ்சுகள் தன் அம்மாவைக் கூப்பிட்டன.
அம்மா புறா பறந்து வந்தது.
ஒரு இலை எடுத்து மூக்கில் பிடித்துக் கொண்டது.
தண்ணீர் அருகில் சென்றது.
தண்ணீரைத் தண்ணீரில் போட்டவுடன்.
எறும்பு அதன் மீது ஏறித் தப்பித்தது.
அந்த இலையை அப்படியே தூக்கி மண் மீது போட்டது.
எறும்பு தன் நன்றியைத் தெரிவித்தது.